பக்கங்கள்:-21

காலை முரசு

# மேர்வின் உட்பட மூவருக்கு மறியல்

கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணைங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவரை எதிர்வரும் 06▶

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 23 | வெள்ளிக்கிழமை | 07.03.2025 | அதிர்வு 215




# போதைப்பொருள் விநியோகத்தின் கேந்திர நிலையம் படை முகாம்களே

## இதை உணராமல் இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டலாம் என கனவு காணாதீர்கள் என்று கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

(ந.லோகதயாளன்)

"தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் போதைப்பொருள் ஆள்கள் ஓடி ஒளிகின்ற இடம் இராணுவம் மற்றும் கடற்படை முகாம்களே என்பதுதான் உண்மை. இந்த யதார்த்தத்தை விளங்கிக்கொள்ளாமல் அதே இராணுவம் அதே கடற்படையை வைத்துக் கொண்டுதான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கப் போகின்றோம் எனக் கனவு காணாதீர்கள்."

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 06▶

# இறுதி யுத்தத்தில் மருத்துவமனைகள் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது உண்மை

## மக்களுக்கான மனிதாபிமான உதவிகளும் தடுக்கப்பட்டன என்று சர்வதேச ஊடகத்துக்கு ரணில் விக்கிரமசிங்க பேட்டி



"இறுதிப் போரில் சிக்குண்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் தடுக்கப்பட்டன. மருத்துவமனைகள் மீது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது என்பது உண்மை. எனினும், இது திட்டமிடப்பட்ட முறையில் பெருமளவில் இடம்பெறவில்லை."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அல்ஜசீராவுக்கான பேட்டியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

"2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட்டுவிட்டதா?" – என்று 07▶




உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக 2023 முற்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட பழைய வேட்பு மனுக்களை ஒட்டி மூன்று பிரதேச சபைகளை சம்பந்தப்படுத்தி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று மீளப் பெறப்பட்டன.

இதனால் இந்த பிரதேச சபைகளுக்கான தேர்தல்களையும் ஏனைய பிரதேச சபைகளுடன் சேர்த்து நடத்துவதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளது.

மன்னார் பிரதேச சபைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தெஹியத்தகண்டிய பிரதேச சபைக்கு ஐக்கிய தேசியக் கூட்டமைப்பும், தவிரவும் பூநகரிப் பிரதேச சபைக்கு பிறிதொரு தரப்பும் தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த வழக்குகள் நிலுவையில் இருந்த காரணத்தினால் மேற்படி மூன்று பிரதேச சபைகளுக்குமான தேர்தல்களுக்கு புதிய வேட்பு மனுக்களை 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# 5 இட்சம் ரூபா ஒப்பந்த அடிப்படையில் மீகஸ்ஆரே கஜ்ஜா கொலை செய்யப்பட்டார்

மீகஸ்ஆரே கஜ்ஜா என அழைக்கப்படும் அருண விதானகமகே கொலையானது 5 லட்சம் ரூபா ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளார் என தெரியவந்துள்ளது.

இதில் இரண்டரை லட்சம் ரூபா சந்தேகநபரின் மனைவியின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எஞ்சிய பணம் வங்கியில் வைப்பிலிடப்படும் என்ற இணக்கப்பாட்டுடன் இந்த கொலைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் இதுவரை அந்த பணம் சந்தேகநபருக்கு வழங்கப்படவில்லை என்பது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீகஸ்ஆரே கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி மித்தெனிய பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த அவரது 2 பிள்ளைகளும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிலிருந்து பஸ் கொள்வனவின்போது 3010 மில்லியன் ரூபா மேலதிகமாக கட்டணம்




விஞ்ஞான ரீதியான மற்றும் தேவைகளை பகுப்பாய்வு இன்றி இந்தியாவிலிருந்து பஸ்களை கொள்வனவு செய்ததன் காரணமாக 3010 மில்லியன் ரூபா மேலதிகமாக செலுத்த வேண்டியுள்ளமை தெரியவந்துள்ளது.

கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த கணக்காய்வு அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் 20 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இந்த பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டில் அமைச்சரவை வழங்கிய அனுமதிக்கமைய 54 இருக்கைகள் மற்றும் தலா 35 இருக்கைகள் கொண்ட 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் 2020ஆம் ஆண்டில் அரசாங்கம் மேற்கொண்ட புதிய கொள்கைக்கமைய இதற்கு பதிலாக 600 பஸ்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றுள் 45 இருக்கைகள் மற்றும் 35 இருக்கைகளை கொண்ட பஸ்களே கொள்வனவு செய்யப்படவிருந்தன.

அதற்கமைய, திட்டமிடப்பட்டதை விட மேலதிகமாக 100 பஸ்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

எனினும் இந்த அனைத்து கொள்முதல் நடவடிக்கைகள் தவிர அமைச்சரவையின் ஒப்புதலுடன் 2023ஆம் ஆண்டில் 500 பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

32 இருக்கைகள் கொண்ட பஸ்ஸொன்று 26,662.50 அமெரிக்க டொலருக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, 500 பஸ்களும் 133,11,250 அமெரிக்க டொலருக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை ரூபா பெறுமதியில் பஸ்ஸொன்று சுமார் 11.2 மில்லியன் ரூபாவாகும் என கணக்காய்வு அறிக்கை தெரிவிக்கின்றது.

இது 2018ஆம் ஆண்டு கொள்முதல் செயன்முறையின் அடிப்படையில் கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்ட பஸ்ஸொன்றுக்கான விலையை விட 6.2 மில்லியன் ரூபா அதிகமாகும்.

# செவ்வந்தியைக் கைது செய்ய தொடர்ந்தும் பொதுமக்களின் உதவியை நாடும் பொலிஸ்



கனேமுல்ல சஞ்சீவ சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக துப்பாக்கிதாரிக்கு உதவி செய்த இஷாரா செவ்வந்தி தொடர்ந்து தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைது செய்ய பொதுமக்களின் உதவி இன்னும் தேவை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொதுவாக, உலகில் எந்தவொரு பொலிஸாரும் குற்றங்களை மட்டும் கட்டுப்படுத்த முடியாது என்றும், இதற்குப் பொதுமக்களின் ஆதரவு தேவை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களின் ஆதரவைப் பெறும் நோக்கத்திலும், அந்த நபருக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும் இஷாரா செவ்வந்தியைக் கைது செய்வதற்கு வழிவகுக்கும் தகவல்களை வழங்குபவர்களுக்கு 12 இலட்சம் ரூபா வெகுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இந்தத் தொகை அதிகரிக்கப்படுமா என்று ஊடகவியலாளர்கள் வினவியபோது, இந்த விடயத்தில் கருத்துத் தெரிவிக்க இயலாது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.



# இலங்கையின் சுகாதாரத்தை மேம்படுத்த புதிய அணுகுமுறையை நாட வேண்டும்!

## சபையில் சத்தியலிங்கம் எம்.பி. சுட்டிக்காட்டு




இலங்கையின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்குப் புதியதொரு அணுகுமுறையை நோக்கிச் செல்ல வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று குழுநிலை விவாதத்தில் கருத்துரைத்த அவர், இந்த விடயத்தை உலக சுகாதார ஸ்தாபனமும் வலியுறுத்தியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

சுகாதாரம் அபிவிருத்தியின் அளவு கோளாக உள்ளது என்றும் சத்தியலிங்கம் எம்.பி. மேலும் கூறினார்.

# வடக்கு, கிழக்கில் மொட்டு எந்தச் சின்னத்தில் போட்டி?

## இன்னும் முடிவில்லை என்கிறார் சாகர காரியவசம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவது என்பது தொடர்பில் இன்னும் முடிவெடுக்கவில்லை எனவும், பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டு வருகின்றது எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

மேற்படி தேர்தலை எதிர்கொள்வதற்கான மொட்டுக் கட்சியின் ஏற்பாடுகள் தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசத்திடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்படி தகவலை அவர் வெளியிட்டார்.

“இலங்கையிலுள்ள மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடும் நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. மொட்டுச் சின்னத்தில் களமிறங்கவே எதிர்பார்க்கின்றோம். எனினும், வடக்கு, கிழக்கில் சிறு மாற்றம் வரலாம். பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம்.



எனினும், இவ்விரு மாகாணங்களிலும் சில இடங்களில் மொட்டுச் சின்னத்தில் வருவோம். ஏனைய மாவட்டங்களில் மொட்டுச் சின்னத்தின் கீழ் களமிறங்குவோம்.” – என்றார்.

# 5000 இற்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு தயார்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவிப்பு

5,000 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற தயாராகின்றனர் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வைத்தியத்துறைக்கு தகுதி பெற்று வெளிநாடு செல்லுவதற்கு வைத்தியர்கள் எதிர்பார்கின்றனர் எனவும் ஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

வைத்தியர்கள் நாட்டில் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய ஒரு சூழல் இன்று இல்லை எனவும் வைத்தியர்களுக்கு நியமனம் வழங்குவதைப் போல வைத்தியர்களை நாட்டிலேயே பணியாற்றக்கூடிய ஒரு சூழலையும் ஏற்படுத்திக் கொடுங்கள் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.




# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்

கொழும்பு – முகத்துவாரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முவதொர உயன பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முகத்துவாரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு 14 பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து 10 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முகத்துவாரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# பயிர்நிலங்களுக்கான நஷ்டஈடுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல்

மழை மற்றும் அனர்த்தங்கள் காரணமாக கடந்த காலங்களில் ஏற்பட்ட பயிர்ச்செய்கை பாதிப்புக்கான நஷ்டஈடுகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்ட யோசனையினூடாக விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் மற்றும் அந்த ஒதுக்கீடுகளை உரிய வேலைத்திட்டங்களுக்காக பயன்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது

விவசாய தரவுகளில் காணப்படும் முழுமையற்ற தன்மையின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட சில தீர்மானங்களில் தவறு ஏற்பட்டதையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

விவசாய உற்பத்திகளுக்கு சந்தையில் நியாயமான விலையைப் பெற்றுக்கொடுப்பதுடன் விவசாயிகளின் பாதுகாப்பைப் போலவே நுகர்வோருக்கும் நியாயமான வகையில் விலைகளை நிர்ணயிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும், கால்நடை வளங்கள் துறையின் முன்னேற்றத்திற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், ஏற்றுமதி விவசாய பயிர்கள் உக்குவிப்பு, மில்கோ நிறுவனத்தின் முன்னெடுப்பு மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோருவது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்த மூன்று பிரதேச சபைகள் தொடர்பான உயர் நீதிமன்ற வழக்குகள் நீதியரசர் மஹிந்த சமயவர்த்தன, மேனகா விஜயசுந்தர ஆகியோர் முன்னிலையில் நகர்த்தல் பத்திரம் மூலம் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

உள்ளூராட்சிசபைத்தேர்தல்விசேடஏற்பாடுகள் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதால், முன்னைய வேட்பு மனுக்கள் ரத்தாகி, புதிய வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பது நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதை அடுத்து அந்த வழக்குகளை மீளப் பெறுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

வழக்குகள் கை வாங்கப்பட்டுள்ள நிலையில் இந்த மூன்று சபைகளுக்குமான தேர்தல் அறிவிப்பையும் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் நாள்கள் பற்றிய அறிவிப்பையும் தேர்தல் ஆணையம் வரும் திங்கட்கிழமையன்று வெளியிடும் என்று தெரிகின்றது.

அந்தத் தினத்தில் இருந்து – அதாவது திங்கட்கிழமை பத்தாம் திகதியிலிருந்து 14 நாள்களின் பின்னர் மூன்றரை நாள்களுக்கு வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனப் பெரும்பாலும் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அதாவது வரும் 24, 25, 26 மற்றும் 27 ஆகிய திகதிகளில் இந்த மூன்று பிரதேச சபைகளுக்குமான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

கல்முனை மாநகர சபை தொடர்பான விடயத்தில் அந்த உள்ளூராட்சி சபையின் வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பாக மீள் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட வேண்டும் என்று கோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் இருப்பதால் அந்த சபைக்கான தேர்தல் இப்போது நடைபெறாது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்போது புதிதாக வேட்பு மனு கோரப்படும் மூன்று உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல்கள் ஏனைய அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல்களுடன் சேர்த்து ஒரே நாளிலேதான் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது. பெரும்பாலும் மே முதல் வாரத்தில் தேர்தல் திகதி அமையும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் உறுதியாகக் கூறின.

\+ \+ \+

'வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும், ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும்' – என்று கூறுவார்கள். அரசியலிலும் இது சகஜம் போலும்.

2009 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தமையை அடுத்து 2010 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ பெரு வெற்றியீட்டினார். அந்த வெற்றியை அடுத்து அவர் நாடாளுமன்றத்தைக் கலைக்க, 2010 ஏப்ரலில் பொதுத்தேர்தல் வந்தது. அந்தப் பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் தமது வீணைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஒற்றைக் காலில் நின்றார். ஆனால் அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தமது முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ராஜபக்ஷக்கள் தங்களுடைய கூட்டணியின் வெற்றிலைச் சின்னத்தில்தான் ஈ.பி.டி.பி. போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்திக் கட்டாயப்படுத்தினர். வேறு வழியின்றி அந்த அழுத்தத்துக்கு அடிபணிய வேண்டியவரானார் டக்ளஸ் தேவானந்தா.

இப்போது நிலைமை தலைகீழ்.

ராஜபக்ஷக்களின் சிறிலங்கா பொது ஜன பெரமுன (மொட்டுக்) கட்சி வடக்கில் யாருடன் கூட்டுச் சேர்வது என்று தெரியாத இக்கட்டில் உள்ளது. ஈ.பி.டி.பியின் பட்டியலில் சேர்ந்து போட்டியிட மொட்டு விரும்புகின்ற போதிலும் அந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார் டக்ளஸ் தேவானந்தா என அறிய வந்தது.

டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்த வரை அவரது நிலைப்பாடு ஒருவகையில் சரியானது. 'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி!' என்பது அவரது கோஷம். மத்தியில் – கொழும்பில் – பெரும்பான்மை இனவாதிகளின் கட்சியில் சேர்ந்து போட்டியிடுவது கூட்டாட்சித் தத்துவம். தமது தாயகத்தில் – உள்ளூர் விடயங்களில் – தனித்துப் போட்டியிடுவது மாநிலத்தில் சுயாட்சி விவகாரம்தான். ஆகவே அதில் மொட்டுவுக்கு இடம் அளிக்க மாட்டேன் என்று அவர் கை விரித்தமையை தவறு என்றும் கூற முடியாதுதானே!

\+ \+ \+

உடலுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களுடன் யாழ். குடா நாட்டின் காற்று மாசுபாடு உச்சமாக உள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வழிகாட்டலின் கீழ், மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை தயாரித்த ஒரு மதிப்பீட்டு அறிக்கையில் இந்த விவரம் அம்பலமாகியுள்ளது.

யாழ். குடா நாட்டின் காற்று மாசுபாடு உச்சமாக உள்ளது எனத் தெரிவித்து, அது தொடர்பில் உரிய நடவடிக்கைக்கு உத்தரவிடுமாறு கோரி, கலாநிதி உமாசுகி நடராஜன் என்பவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த வழக்கை ஒட்டி குடா நாட்டின் காற்றின் தரம் மற்றும் மாசுபாடு குறித்து ஒரு மாத காலத்திற்கு தரவுகளைச் சேகரித்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அந்த வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைமை நீதியரசர் முகமட் லாபர் தாஹிர் மற்றும் நீதியரசர் சரத் திஸநாயக்க ஆகியோர் முன்னிலையில் எடுக்கப்பட்ட போது மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையிலேயே மக்களின் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய ஆபத்தான உள்ளடக்கங்கள் பெரும் மாசாகக் குடாநாட்டின் காற்றில் கலந்துள் ளன என்பது வெளிப்படுத்தப்பட்டது.

இதை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்களை முன்னெடுப்பதாயின் அதற்கு பெரும் நிதிச் செலவு வரும் என்பதால் அது பற்றி ஆராயப்பட்டு வருவதாக நேற்று நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டது.

சர்வதேச நாடுகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து உதவிகளைப் பெற்று இந்தக் காற்று மாசுபாட்டை நீக்குவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று சட்டமா அதிபர் தரப்பில் நேற்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதை அடுத்து வழக்கு ஜூலை 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி கொண்டுவந்த போதைப்பொருள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை தொடர்பில் உரையாற்றும்போதே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியின் போதைப்பொருள் தடுப்புப் பிரேரணையை வரவேற்கும் அதேநேரம் இந்தப் பிரேரணையைப் பார்க்கும்போது எதிர்த் தரப்பால் முன்வைக்க வேண்டிய ஒரு பிரேரணையை அரச தரப்பால் கொண்டு வரப்பட்டது ஓர் ஆச்சரியமான விடயம்.

இது ஓர் அறைக்குள் இருக்கும் யானையைக் கண்டும் காணாத மாதிரி இருக்கின்றோம். வடக்கு, கிழக்கில் இன்று இராணுவத்தின் பிரசன்னமானது நாட்டின் 20 பிரிவுகளில் 16 பிரிவுகள் வடக்கு, கிழக்கில் நிலை கொண்டுள்ளது. அதில் வடக்கில் 14 பிரிவுகள் உள்ளன. கடற்கரைகளில் இரண்டு கிலோமீற்றருக்கு ஒரு பொயின்ற் என மக்களின் காணிகளைக் கடற்படை பிடித்து வைத்துள்ளது. முல்லைத்தீவில் இரு பொது மகனுக்கு ஒரு படையினர் எனவும், யாழ்ப்பாணத்தில் 14 பொது மகனுக்கு ஒரு படையினர் எனவும் உள்ளதோடு வன்னியில் 10 பொது மகனுக்கு ஒரு இராணுவம் என்ற அடிப்படையில் உள்ளது.

போரில் வென்றெடுத்த புலனாய்வில் திறமையானவர்கள் எனக் கூறுகின்றனர். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இப்படியான மோசமான நிலை இருந்தால் உண்மையில் நினைக்கின்றீர்களா இராணுவத்தின் முழுப் பங்களிப்பு இல்லாமல் இப்படிப்பட்ட மோசமான நிலை உருவாகலாம் என்று?

கிறீஸ் பூதம் வந்தபோது தப்பியோடியவர்கள் எல்லாம் இராணுவ முகாம்களுக்குத்தான் ஓடித் தப்பினர் எனத் தெரிய வந்தது. ஆவாக் குழுவினர் பொலிஸாராலேயே வழி நடத்தப்படுகின்றனர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இன்று போதைப்பொருள் ஆள்கள் ஓடி ஒளிகின்ற இடம் இராணுவம் மற்றும் கடற்படை முகாம்களே எண்பதுதான் உண்மை. இந்த யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளாமல் அதே இராணுவம், அதே கடற்படைகளை வைத்துக்கொண்டுதான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கப் போகின்றோம் எனக் கனவு காணாதீர்கள். பிரச்சினை எங்கே என சரியாக அடையாளம் கண்டு பிரச்சினையை அகற்றுங்கள்.

இந்த இராணுவத்தினர் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மக்களை எதிரிகளாகத்தான் பார்க்கின்றனர் என்பதுதான் உண்மை. இன்றும் படையினரின் முழு வேலைத்திட்டம் என்பது வடக்கு, கிழக்கில் உள்ள மக்களை எதிரிகளாகப் பார்த்து அவர்களை அடிமையாக்கும் கோணத்தில் செயற்படுவதுதான் இங்கு பிரச்சினை.

அவர்கள்தான் இந்தப் போதைக்கு முழுக் காரணம் என்பதனை விளங்கிக் கொள்ளாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இதனை நாங்கள் கோபத்திலோ அல்லது எரிச்சலிலோ அல்லது இனவாதத்திலோ சொல்லும் இடம் அல்ல இது. போர் முடிந்த பின்பு மனோநிலையில் மாற்றம் இல்லாது வடக்கு, கிழக்கில் இருக்கும் இந்த நிலையின் உண்மை நிலையை விளங்கிக்கொண்டு செயற்பட வேண்டும்." – என்றார்.

---

## மேர்வின் உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மூவரும் நேற்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது





ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் என்.எம்.எம். பாரீஸ் தலைமையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய தீப் லொக்கு பண்டார இணைந்து கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.




மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை,நானாட்டான் பிரதேச சபை ,முசலி பிரதேச சபை ,மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக் கான கட்டுப்பணத்தை இவர்கள் செலுத்தியுள்ளனர்.

மன்னார் பிரதேச சபை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்றமையினால் மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையிலே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மன்னார் மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை செலுத்தி உள்ளது.

இம்முறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டாக இணைந்து போட்டியிடுவதனால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கதிரை சின்னத்தில் போட்டியிட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெப்ரவரி மாதத்தில் மாத்திரம் 240,217 சுற்றுலா பயணிகள் வருகை



2025 பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 240,217 சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கையானது இதுவரை பெப்ரவரி மாதத்தில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை விட அதிகம் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 235,618 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இறுதி யுத்தத்தில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மெஹ்டி ஹசன் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, எந்தச் சமூகத்துக்கும் இதுவரை நீதி வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

“விமானப் படை விமானங்கள் மருத்துவமனைகள் மீது குண்டுவீசிய தருணங்கள் உள்ளன. இதற்காகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், இந்தத் தாக்குதல் பெருமளவில் இடம்பெற்றது என்று நான் சொல்ல மாட்டேன்.” – என்றும் ரணில் கூறினார்.

“ஐக்கிய நாடுகளின் குழு இலங்கைப் படையினர் போரில் சிக்குண்டவர்களுக்கான மனிதாபிமான உதவிகளைத் தடுத்தனர் என்று குறிப்பிட்டுள்ளனரே?“ – என்று மெஹ்டி ஹசன் கேள்வி எழுப்பினார்.

”நான் அது இடம்பெற்றது என நினைக்கின்றேன்.” – என்று அவ்வேளை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் தெரிவித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## யதார்த்தத்தில் செயல்படுவோம்!

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கின் ஒரு மிக முக்கிய பிரச்சினை குறித்துத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில ஆழமான விடயங்களை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

வடக்கு கிழக்கில் போதைப் பொருள் சம்பந்தப்பட்ட நபர்கள் ஓடி ஒளிகின்ற இடமாக இராணுவம் மற்றும் கடற்படையினரின் முகாம்கள்தான் உள்ளன என்று குற்றம் சுமத்தும் அவர், அந்த முப்படைகளை வைத்துக்கொண்டுதான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கப் போகின்றோம்என்று கனவு காணாதீர்கள்எனக்கூறியிருக்கிறார். இது கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

இலங்கை இராணுவத்தின் மொத்தமுள்ள 20டிவிஷன் படைகளில் 16டிவிஷன்கள் வடக்கு, கிழக்கில்தான் உள்ளன. அவற்றில் 14 டிவிஷன்கள் வடக்கில் மட்டும் நிலை கொண்டுள்ளன. கடற்கரையில் இரண்டு கிலோ மீட்டருக்கு ஒரு கடற்படை முகாம் முனை - நிலை - என்ற அளவில் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவில் இரு பொது மக்களுக்கு ஒரு படையினர் என்ற ரீதியிலும், யாழ்ப்பாணத்தில் 14 பொதுமக்களுக்கு ஒரு படையினர் என்ற அளவிலும், வன்னியில் பொதுமக்கள் 10 பேருக்கு ஒருவர் என்ற விகிதத்திலும் படையினர் நிலை கொண்டிருக்கிறார்கள்.

அப்படி இருக்கையில் போதைப் பொருள் வர்த்தகத்திற்கான ஒரு மையமாக வடக்கு இலங்கை திகழ்வது எங்ஙனம் என் அவர் கேள்வி எழுப்புவதில் நியாயம் இருக்கவே செய்கின்றது.

இவ்வளவு தூரம் இராணுவ மயப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் போதைப்பொருள் வர்த்தகம் விஸ்வரூபம் எடுத்து பெருமளவில் பரவி வருகிறது. படைகளின் ஒத்துழைப்பு, உதவி, நேரடி ஈடுபாடு, பங்களிப்பு இல்லாமல் போதைப்பொருள் இப்பிரதேசத்தில் இவ்வளவு தாராளமாகப் புழங்குவது எங்ஙனம் என்ற அவரது கேள்விக்குப் பதில் இருப்பதாகத் தெரியவில்லை.

சரியோ, பிழையோ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வடக்கு கிழக்கு இருந்த போது, போதைப் பொருள் பாவனை - வர்த்தகம், சட்ட விரோத மது உற்பத்தி போன்றவை எவையும் கிஞ்சித்தும் நடைபெறவில்லை என்பது யதார்த்த பூர்வமான உண்மை.

அப்போது வடக்கு, கிழக்கில் புலிகளின் பிரசன்னம் இவ்வளவு தூரம் - இப்போதைய இந்த இராணுவத்தைப் போல தாராளமாக இருக்கவில்லை. ஆனால் வடக்கையும் கிழக்கையும் முழு ஆக்கிரமிப்பில் இலங்கைப் படையினர் வைத்திருக்கையில், அங்கு போதைப் பொருள் வர்த்தகம் உச்சமாக இருக்கின்றது என்றால் அதற்கு பதில் கூற வேண்டியவர்கள் - பொறுப்பு கூற வேண்டியவர்கள் - படையினர்தான் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டுவது புறக்கணிக்கத்தக்க விடயம் அல்ல.

படையினரின் - குறிப்பாக இராணுவத்தினரின் - முழுப் பங்களிப்பில்லாமல் போதைப் பொருள் பரவல் இவ்வளவு தூரம் வடக்குக் கிழக்கில் விஸ்வரூபம் எடுத்திருக்கவே முடியாது என்ற சாரப்பட்ட அவரது குற்றச்சாட்டுக்கு மௌனத்தைப் பதிலளிப்பது தவிர அரசிடம் வேறு பிரதிபலிப்பு இல்லை.

போரில் வென்றோம், புலிகளைத் தோற்கடித்தோம், புலனாய்வில் திறமையானவர்கள் நாங்கள் என்றெல்லாம் தம்பட்டம் அடிக்கும் அரசு தரப்புக்கு, இந்த போதைப் பொருள் பரம்பலைக் கட்டுப்படுத்துவது என்பது இயலாத காரியம் என்று கூறுவது நம்ப முடியாத விடயம்.

இந்த விடயத்தில் கொழும்பு ஆட்சி பீடத்தினால் நிலைமையை கட்டுப்படுத்த முடியாது இருப்பது என்பது வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களை எதிரிகளாகப் பார்க்கும் இலங்கை அரசினதும் படைகளினதும் போக்கின் விளைவேயன்றி வேறில்லை. வேலியே பயிரை மேய்கின்றது என்ற ரீதியிலான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் குற்றச்சாட்டு உதாசீனப்படுத்தப்படக் கூடாது.

உரிமைக்காக போராடும் இனத்தில் மன வலிமையை - சுதந்திரத்திற்கான உரிமையை - தங்கள் உரித்துக்கான அவர்களின் வேணவாவை - அடக்கி, ஒடுக்குவதற்கும், அவர்களை ஒரு நலிவுற்ற இனக் கட்டமைப்பாக மாற்றி, அவர்களின் அபிலாசைகளுக்கான வலுவான கோரிக்கையை நீர்த்துப்போகச் செய்து, அதனை மலினப்படுத்துவதற்காகவும் ஏவி விடப்பட்ட ஒரு தூண்டுதல்தான் போதைப் பொருள் என்ற பிணி.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கூறுவது போல இலங்கைப் படைகளையும் பொலிஸாரையும் நம்பி இந்தப் பேரரக்கனை தமிழர் தாயகத்தில் இருந்து ஒழித்து விடலாம் என்று நாம் கனவு காணாது, யதார்த்தத்தில் என்ன வழி முறையை நாட வேண்டும் என்பதைத் தீர்மானித்து, திட்டமிட்டுச் செயல்பட வேண்டும்.





# ஜனாதிபதிக்கும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

2025ஆம் ஆண்டு வரவு – செலவு திட்ட முன்மொழிவுகளில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும், கல்வித் துறையில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதுடன், இது தொடர்பாக செயல்படுத்த வேண்டிய புதிய சீர்திருத்தங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பாடசாலைக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



















# சிறுபோகத்தில் வயல்களுக்குத் தேவையான உரத்தை தட்டுப்பாடின்றி வழங்க தீர்மானம்

எதிர்வரும் சிறுபோகத்தின் போது வயல் நிலங்களுக்குத் தேவையான உரத்தைத் தட்டுப்பாடின்றி தொடர்ச்சியாக வழங்குவதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

சிறுபோகத்தின் போது பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதற்காக வயல்நிலங்களுக்குத் தேவையான உரத்தைத் தட்டுப்பாடின்றி தொடர்ச்சியாக வழங்குவதன் அவசியத்தை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

சிறு போகத்திற்கு அவசியமான உர விநியோகம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சிறு போக நெற்பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான உரம் தொடர்பில் ஆராயப்பட்டது.

தடையின்றி விவசாயிகளுக்கு சிறு போக பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்த கலந்துரையாடலில், விவசாய,கால்நடை,காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ லால்காந்த, காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் வைத்தியர் சுசில் ரணசிங்க, ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்க, விவசாய, கால்நடை,காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டீ.பீ. விக்ரமசிங்க, ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் கபில ஜனக பண்டார, விவசாய தொழில்நுட்ப பிரிவு பணிப்பாளர் நாயகம் ஆர்.டீ.சித்ராநயனா, கமநல சேவை ஆணையாளர் நாயகம் யூ.பீ. ரோஹன ராஜபக்ஷ, தேசிய பசளை செயலக அலுவலக பணிப்பாளர் சந்தன லொகுஹேவகே மற்றும் விவசாய, கால்நடை,காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நிதி அமைச்சு என்பவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள், தனியார் துறை பசளை விநியோக நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.





# வடக்கின் பெரும் போர் நேற்று ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன்)

வடக்கின் பெரும் போர் என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான 118ஆவது வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டச் சமர் நேற்று ஆரம்பமானது.

தொடர்ச்சியாக 3 நாட்கள் இரண்டு இன்னிங்ஸ்களாக இடம் பெறும் 118ஆவது பெரும் போர் துடுப்பாட்டப் போட்டியில் அஷ்னாத் தலைமையிலான யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியும் நியூட்டன் தலைமையிலான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் களமிறங்கின.

நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பித்த இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அதன் பிரகாரம் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 57.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் அபிஷேக் 27 ஓட்டங்களையும், சிமில்டன் மற்றும் நியூட்டன் ஆகியோர் தலா 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சார்பில் அணித் தலைவர் அஷ்னாத் 5 விக்கெட்டுகளையும், மாதுஎன், ரண்டியோ ஆகயோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பாடிய யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி 32 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 104 ஓட்டங்களை பெற்றபோது முதலாம் நாள் ஆட்டம் நிறைவிற்கு வந்தது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சார்பில் அனுஷாந் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும், அஷ்னாத் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் நியூட்டன் 2 விக்கெட்டுகளையும், அபிலாஷ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.







# ஈஸ்டர் தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை தனக்குத் தெரியும் எனக் கூறுகிறார் ஞானசார தேரர்



ஈஸ்டர் தின குண்டு தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி யாரென்பது தனக்கு தெரியுமமென பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

மகா சங்கத்தினரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுகொள்வதற்காக நேற்று அவர் கண்டி சென்றிருந்த நிலையில், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஈஸ்டர் தினத்தில் இடம்பெற்றதால் ஈஸ்டர் தின தாக்குதல் என்று கூறுகிறார்கள். போயா தினத்தில் இடம்பெற்றிருந்தால் அதனை போயா தின தாக்குதல் என்று கூறியிருப்பார்கள். இந்த தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் பிரதான சூத்திரதாரி ஒருவர் இருக்கின்றார் எனக் கூறினார்கள். தற்போது அவரை தேடுகிறார்களா?

பிரதான சூத்திரதாரி யாரென்பது எனக்கு தெரியும். ஆனால் ஊடகங்களுக்கு அதைக் கூற முடியாது. நாட்டின் ஜனாதிபதிக்கும் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருப்பவர்களுக்கும் அறிவித்து விட்டே அதனை பகிரங்கமாக அறிவிப்பேன்.

பிரதான சூத்திரதாரியின் ஆரம்பம், அவர் தொடர்புபட்டிருந்த நபர்கள், அவர் இருந்த இடம், பிரதான சூத்திரதாரி சஹ்ராணுக்கு பயிற்சி அழித்த விதம், அவரை வழி நடத்திய விதம் என சகல விடயங்களும் எனக்கு தெரியும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# மட்டு புதூரில் குமார் குழுவைச் சேர்ந்த இருவர் ஐஸ் போதை பொருள், ஆயுதங்களுடன் கைது



**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு புதூர் பிரதேசத்தில் ஐஸ் போதை பொருள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் குமார் குழுவைச் சேர்ந்த இருவரை நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தாங்கள் கைது செய்துள்ளனர் பொலிஸார் தெரிவித்தனர்

இதுபற்றி தெரியவருவதாவது:-

இந்தப் பிரதேசத்தில் இரு குழுக்கள் இயங்கி வருகின்றன எனவும் இவர்கள் வாள்வெட்டு மற்றும் சண்டைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. பல்வேறு குற்றச் செயல்களில் தொடர்புபட்டு இவர்கள் தலைமறைவாக இருந்து வந்துள்ளனர். இந்த நிலையில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து போதை ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்பெக்ஸ்டர் ரி. கிருபாகரன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் இரவு இந்தப் பிரதேசத்தில் தலைமறைவாகியிருந்தவர்கள் ஒளிதிருந்த வீட்டை முற்றுகையிட்டு அங்கு 3,100 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவரையும் கனரக கூரிய ஆயுதங்களுடன் ஒருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குமார் குழுவைச் சேர்ந்தவர்கள் எனவும், பிரதேசத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தி வருபவர்கள் எனவும், பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்கள் எனவும் கூறும் பொலிஸார் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் தெரிவித்தனர்.

# திருமறைக் கலாமன்ற மகளிர் தினம் இளவாலையில் நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம்,இளவாலை திருமறைக் கலாமன்றங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மகளிர் தின நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு இளவாலை திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலைக் களரியில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்த்துறை ஓய்வுநிலை விரிவுரையாளரும், எழுத்தாளருமான திருமதி ராணி சீதரனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்த் துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கவிதா சந்திரகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

நிகழ்வுளாக நடனங்கள், பாடல்கள்,கவிதை போன்றவற்றுடன் சிறப்பு நிகழ்வாக யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும் " செம்பாத்தாள்" கூத்துருவ நாடகமும் இடம்பெறும். ஒல்லாந்தர் காலத்தில் 1679 இல் வன்னிப் பிரதேசத்தில் தென்னமரவடி பிராந்தியத் திற்கு தலைமை வகித்த மரியசெம்பாத்தாவின் வரலாற்று அடிப்படைகளில் இருந்து உருவாக்கப்பட்ட படைப்பாக "செம்பாத்தாள்" அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். மாவட்ட விவசாயக் குழு கூட்டம் நேற்று

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய குழு கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம் பெற்றது. இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர்கள், திணைகள் அதிகாரிகள், விவசாய பணிப்பாளர்கள், மாவட்ட விவசாய திணைக்களத்தினர் மற்றும் துறை சார்ந்தவர்கள், கமநல சேவைப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வரும் வெள்ளை ஈயின் தாக்கம் தென்னைகளை அதிகளவில் பாதிப்பது தொடர்பிலும், அதற்கு விவசாய மருந்துகளை விசிறி அவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் தென்னை பயிர்ச் செய்கை சபையினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் வீதிகளை அமைக்கும்போது கமநல சேவைகள் விவசாய குழுக்களின் கருத்துக்களை கேட்டு அவற்றை செய்ய வேண்டும் என்பன போன்ற பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகளும் எட்டப்பட்டன.








# மன்னாரில் கனிய மணல் அகழ்வு குறித்து நேற்று செயலகக் கூட்டத்தில் ஆராய்வு





(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

கனிய மணல் அகழ்வு தொடர்பாக மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நேற்று மதியம் மன்னார் மாவட்ட சுற்றாடல் அமுலாக்கல் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புவி சரிதவியல் திணைக்கள அதிகாரிகள், பொறியியலாளர் உட்பட பல்வேறு திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

கனிய மணல் அகழ்வு தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் முன்னெடுக்காமல் நிறுத்தி வைக்க அமைச்சர் பிமல் ரத்நாயக்க மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை மதியம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் கனிய மணல் அகழ்வு உட்பட சுற்றாடலைப் பாதிக்கும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு நடவடிக்கை முன்னெடுப்பதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கனிய மணல் அகழ்வை முற்றாக நிறுத்துவதற்கான நடவடிக்கையை மன்னார் மாவட்ட அதிகாரிகள் தரப்பினர் மிக காத்திரமாக முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை மன்னார் மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளினால் முன்வைக்கப்பட்டது.

இதற்கு பதில் அளித்த மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் இந்த நடவடிக்கை தொடர்பில் எதிர்வரும் மே மாதம் வரை கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை நிறுத்தி வைக்குமாறு அமைச்சர் விமல் ரத்னநாயக்க தெரிவித்துள்ளார் எனவும், அமைச்சர் மன்னாருக்கு வருகை தந்து கனிய மணல் அகழ்வு நடவடிக்கை தொடர்பில் ஆராய்ந்து அதற்கான நடவடிக்கையை எதிர் காலத்தில் முன்னெடுப்பார் எனத் தெரிவித்திருந்தார் எனவும் அரச அதிபர் சுட்டிக்காட்டினார்.

மன்னார் மாவட்ட பகுதியில் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சகல நடவடிக்கைகள் குறித்தும் சட்டவிரோத மணல் அகழ்வு குறித்தும் அரச திணைக்களங்கள் மற்றும் பொலிஸ் தரப்பினர் தீவிரமாக செயல்பட்டு நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும் என அங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

# வெளிநாட்டு சிகரெட் பெட்டிகளை விற்க முயன்ற இளைஞர் அச்சுவேலியில் கைது





3 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட் பெட்டிகளை விற்க முயன்ற புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை அச்சுவேலி பொலிசார் நேற்று மாலை கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது :-

யாழ் அச்சுவேலி பஸ் நிலையத்தில் வெளிநாட்டு சிகரட் பெட்டிகளை விற்பதற்காக இளைஞர் ஒருவர் வருகை தந்துள்ளார் எனப் பொலிஸாருக்குப் புலனாய்வுத் தகவல் கிடைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிசெ இளைஞர் ஒருவரை 160 வெளிநாட்டு சிகரட் பெட்டிகளுடன் கைது செய்தனர்.

22 வயதான – முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த – இளைஞர் ஒருவரை கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட சிகரட்டுகளின் பெறுமதி 3லட்சத்து 20 ஆயிரம் என சராசரியாக மதிக்கபட்டுள்ள நிலையில் சந்தேக நபரிடம் இருந்து 25 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றபட்டுள்ளது.

## சாயி இசையமுதம்

த.சுபேசன்

சத்திய சாயி பாபாவின் 100 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை கொழும்பில் அவருடைய அன்பரால் இசை நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

சாயி அன்பரும், ஏற்கனவே சாயி முன்னிலையில் பஜனைப் பாடல்களைப் பாடி அருளாசி பெற்றவருமான ஸ்ரீரவிராஜ் நாஸ்ரே என்பவருடைய இசை நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 5.30 தொடக்கம் 7மணி வரை வெள்ளவத்தை கொழும்பு இந்து மகளிர் கல்லூரி–சைவ மங்கையர் வித்தியாலய சிவானந்த நிலையத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# வவுனியா இரட்டைக் கொலைச் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க அனுமதித்து மேல் நீதிமன்றம் உத்தரவு

(கி.வசந்தன்)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு விளக்கமறியலை நீடிக்க காரணங்கள் போதாமையால் பிணை வழங்கலாம் என வவுனியா மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் ஜுலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி, பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர்.

இந்த இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்தமையுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்றில் நேற்று முன்தின்ம் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ.ஆர்.டி சில்வா ஆஜராகி, சந்தேக நபர்கள் சார்பில் மேல் நீதிமன்றில் பிணை கோரி பிணை மனு சமர்ப்பித்தார்.

அதனை மறுத்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டவாதிகளால், பிணை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடிக்குமாறு வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

இவை தொடர்பில் கவனம் செலுத்திய மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹால் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பிணை மறுப்புக்கு விசேட காரணங்கள் முன்வைக்கப்படாமையால் – கைது செய்யப்பட்டவர்களுக்கான விளக்கமறியலை நீடிக்க காரணம் போதாமையால் – சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கலாம் என உத்தரவிட்டார்.



# முள்ளிமலையில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டது

(பாறுக் ஷிஹான்)

பாலமுனை முள்ளிமலை பகுதியில் தூக்கில் தொங்கி நிலையில் மீட்கப்பட்ட சடலத்தை இறந்தவரின் உறவினர்கள் அடையாளம் கண்டுள்ளனர் அக்கரைப்பற்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

புதன்கிழமை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமுனை முள்ளிமலையடி பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் ஆணின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் பொதுமக்களின் தகவலின் அடிப்படையில் மீட்கப்பட்டிருந்தது.

இது குறித்து அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தமையுடன் நேற்று வியாழக்கிழமை அம்பாறை தடவியல் பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து தடவியல் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு அக்கரைப்பற்று அலிக்கம்பை பகுதியில் ஏரப்பன் ராமன் (69 வயது) என்பவர் காணாமல் போயிருந்தார் என அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டிருந்தது.

அவரே தூக்கில் தொங்கிய நிலையில் மரணமடைந்துள்ளவர் என சம்பவ இடத்திற்கு சென்ற உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

இம்மரணம் குறித்து அக்கரைப்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.





# வவுனியா பிரதேச கலைஞர்கள் ஒன்று கூடல்

**(கி.வசந்தன்)**

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலைஞர்களின் ஒன்று கூடல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா நகரசபை திறந்தவெளி அரங்கில் நேற்று வவுனியா பிரதேச செயலாளரும், கலாசார பேரவையின் தலைவருமான இ.பிரதாபன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, பிரதேச கலைஞர்களின் பாடல்கள், கூத்துக்கள், இசை முழக்கம், கவிதைகள், பட்டிமன்றம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

அத்துடன், கலைஞர்களுக்கான அரசாங்க அடையாள அட்டையும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தர், கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.















# முடக்கப்பட்ட விகடன் இணையத்தளம் மீதான தடையை நீக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு அருகில் பிரதமர் மோடி சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் அமர்ந்திருப்பதைப் போன்று கேலிச் சித்திரம் ஒன்று விகடனின் இணைய இதழான விகடன் ப்ளஸ்ஸில் வெளியிடப்பட்டது.

இந்த கேலிச்சித்திரம் தொடர்பாக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கொடுத்த புகாரின் பேரில், விகடனின் இணையதளம் கடந்த 15 ஆம் திகதி முடக்கப்பட்டது. எனினும், இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை மத்திய அரசு வெளியிடவில்லை.

மத்தியதொலைத்தொடர்புத்துறைக்கு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் அளித்த பரிந்துரையின்படி, விகடன் பத்திரிகையின் இணையதளம் இந்தியாவில் முடக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.



இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் விகடன் நிறுவனம் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை நீதிபதி பரதசக்ர வர்த்தி முன்பு நடைபெற்றது.

ஆனந்த விகடன் நிறுவனம் சார்பில் மூத்த வழக்கறிஞர் விஜயநாராயணன் ஆஜராகி வாதிட்டார். இது ஊடக சுதந்திரத்தை பறிக்கும் செயல் என்றும் இந்திய இறையாண்மைக்கு எதிரானது என்றும் வாதிட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, இணைய தளம் முடக்கத்தை நீக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளார். அதேசமயம் சம்பந்தப்பட்ட கேலிச்சித்திரத்தை நீக்குமாறும் விகடன் நிறுவனத்துக்கும் அறிவுறுத்தி உள்ளார்.

# தமிழிசை சவுந்தரராஜன் கைது; அண்ணாமலை கடும் கண்டனம்

மும்மொழி கொள்கைக்கு ஆதரவாக சென்னை எம்.ஜி.ஆர். நகரில் பொது மக்களிடம் கையெழுத்து பெற்ற பா.ஜ.க. மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜனை 2 மணி நேரத்துக்கும் மேலாக பொலிஸார் சிறை பிடித்தனர். அவரை விடுவிக்கக் கோரி பா.ஜ.கவினர் வீதி மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.



தமிழக பா.ஜ.க. சார்பில் சென்னை எம்.ஜி.ஆர். நகர் சந்தை பகுதியில் மும்மொழி கொள்கைக்கு ஆதரவாக கையெழுத்து இயக்கம் நேற்று நடைபெற்றது. இதில் பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கலந்துகொண்டு பொதுமக்களிடம் கையெழுத்து பெற்றார்.அப்போது, அனுமதியின்றி பொது மக்களிடம் கையெழுத்து பெற்றமை தொடர்பில் தமிழிசை சவுந்தரராஜனை பொலிஸார் தடுத்தனர்.

கையெழுத்து இயக்கத்தை கைவிட்டு, அங்கிருந்து கலைந்து செல்லுமாறு, தமிழிசை உட்பட பா.ஜ.க.வினர் அனைவரையும் பொலிஸார் எச்சரித்தனர். ஆனால்,தமிழிசைசவுந்தரராஜன்,பொது மக்களிடம் கையெழுத்து பெறாமல், இங்கிருந்து ஒரு அடிகூட நகர மாட்டேன் என பொலிஸாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அங்கேயே நின்றார். பொலிஸார் அவரை சூழ்ந்துகொண்டு சிறை பிடித்து வைத்திருந்தனர்.

தொடர்ந்து, 2 மணி நேரத்துக்கும் மேலாக தமிழிசை அங்கேயே நிற்க வைக்கப்பட்டார். இதையடுத்து, தமிழிசையை விடுவிக்குமாறு பா.ஜ.கவினர் அந்தப் பகுதியில் வீதி மறியலில் ஈடுபட்டனர். அவர்கள் அனைவரையும், பொலிஸார் கைது செய்து, அருகில் உள்ள மண்டபத்தில் அடைத்தனர்.

இந்த கையெழுத்து இயக்கத்தைக் கேள்விப்பட்டு, தி.மு.கவினரும் அங்கு திரண்டு, பா.ஜ.கவினரைக் கைது செய்ய வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். பின்னர், பொலிஸார் தி.மு.கவினரை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இதனால், எம்.ஜி.ஆர் .நகர் சந்தை பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்நிலையில், 2 மணி நேரத்துக்குப் பிறகு, பொதுமக்களிடம் கையெழுத்து பெற தமிழிசைக்கு பொலிஸார் அனுமதி வழங்கினர்.

அப்போது, செய்தியாளர்களிடம் தமிழிசை சவுந்தரராஜன் கூறும்போது, "ஓர் அரசியல் கட்சித் தலைவரை கொடுமைப்படுத்தி 3 மணி நேரம் வெயிலில் நிற்க வைத்துள்ளனர். கைது செய்யுங்கள் என்றாலும் கைது செய்ய பொலிஸார் மறுக்கின்றனர். இது ஆர்ப்பாட்டமோ, போராட்டமோ இல்லை. அமைதியான முறையில் கையெழுத்து இயக்கத்தை நடத்தினோம். முதல்வர், அமைச்சர்கள் வீட்டில் இருப்பவர்கள் நடத்தும் பள்ளிகளில் இந்தி சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

ஆனால், தமிழகத்தில் இந்தி திணிப்பு என மீண்டும் மீண்டும் பொய் பிரச்சாரம் செய்கின்றனர். குழந்தைகளுக்கு வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். முதல்வர் ஸ்டாலின் 'அப்டேட் முதல்வராக' இல்லை. இவரை முதல்வராக வைத்துக்கொண்டு தமிழக இளைஞர்கள் முன்னேற முடியாது. பாமர மக்களுக்கு கல்வி கிடைக்கும் வரை எங்களது போராட்டம் தொடரும். எத்தனை அடக்குமுறைகளை கையாண்டாலும் நாங்கள் தொடர்ந்து போராடுவோம்." என்று கூறினார்.

இதுகுறித்து பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் பக்கத்தில்,

"ஏழை, எளிய குழந்தைகளுக்கும், தரமான கல்வியும், விருப்பமான மொழிகளும் கற்கும் வாய்ப்பை வழங்கும் தேசியக் கல்விக் கொள்கையை ஆதரித்து, தமிழக பா.ஜ.க. சார்பாக நடைபெறும் கையெழுத்து இயக்கத்தினை, சென்னையில் முன்னெடுத்துச் சென்ற தெலுங்கானா, புதுச்சேரி மாநிலங்களின் முன்னாள் ஆளுநர், தமிழிசை சவுந்தரராஜனை தமிழக பொலிஸ் கைது செய்திருக்கிறது.

அறுபது ஆண்டுகளாகத் தமிழ் மொழியை வியாபாரமாக்கி, தனியார் பள்ளிகளில் மட்டும் மும்மொழிக் கொள்கையை அனுமதிக்கும் தி.மு.கவின் இரட்டை வேடம் இன்று அம்பலப்பட்டு நிற்கிறது. தி.மு.கவின் நாடகத்தைப் பொதுமக்கள் உணரத் தொடங்கி, மும்மொழிக் கொள்கைக்குப் பெருமளவில் ஆதரவளிப்பது கண்டு, பயத்தில் நிலை தடுமாறியிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின். அதன் விளைவே, ஜனநாயக ரீதியாக நடைபெறும் கையெழுத்து இயக்கத்தைத் தடுப்பதும், கைது செய்வதும்.

இந்தக் கைது பூச்சாண்டிக்கெல்லாம் தமிழக பா.ஜ.கவினர் பயந்து பின்வாங்கப்போவதில்லை. தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டுக்கும் செல்வோம்." என்று அவர் கூறியுள்ளார்.



# இராணுவ செலவுகளை அதிகரிக்கின்றது தாய்வான்

மாறிவரும் சர்வதேச சூழ்நிலை மற்றும் எதிரிகளிடமிருந்து அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதன் காரணமாக இராணுவ செலவினங்களை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக தாய்வானின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் வெலிங்டன் கூ அதிகாரப்பூர்வ புள்ளிவிபரங்கள் எதுவும் வெளியிடவில்லை என்றாலும் ஜனாதிபதி வில்லியம் லாய் சிங்-டே சட்ட விரோத அச்சுறுத்தல் மற்றும் அவசரக் கால நிலையைக் கருத்தில் கொண்டு பணியாற்றி வருவதாக தெரிவித்துள்ளார்.

அத்தோடு, சீனாவின் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, தாய்வான் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.45 சதவிகிதத்தை இராணுவ செலவீனங்களுக்காக பயன்படுத்த தீர்மானித்துள்ளதாக தாய்வான் அரசாங்கம் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# ஷேக் ஹசீனாவை நாடு கடத்துவது குறித்து இந்தியாவிடமிருந்து இதுவரை பதில் இல்லை

## இடைக்கால பிரதமர் முகமது யூனுஸ் தெரிவிப்பு





பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை நாடு கடத்துமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் இதுவரை இந்தியாவிடம் இருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை என பங்களாதேஷின் இடைக்கால பிரதமர் முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன் நாட்டு பிரஜைகளுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டுள்ளார் எனவும் இது குறித்து அவரிடம் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவரிடம் மட்டுமல்ல, அவருடன் தொடர்புடைய நபர்கள், அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவரது நண்பர்களிடமும் விசாரணை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

பங்களாதேஷில் உள்ள சர்வதேச குற்றப் புலனாய்வு அமைச்சினால் ஹசீனாவுக்கு எதிராக 2 முறை பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பங்களாதேஷின் இடைக்கால பிரதமர் முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அவரை நாடு கடத்தக் கோரி இந்தியாவிற்கு 2 முறை கடிதங்கள் அனுப்பி உள்ளதாகவும், ஆனால் இந்தியாவிலிருந்து இது வரை எந்த ஒரு அதிகாரப்பூர்வ பதிலும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார் .

மேலும் பங்களாதேஷ் நீதிமன்றத்தில் ஷேக் ஹசீனா நேரில் முன்னிலையாகவில்லையென்றால் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இடைக்கால பிரதமர் முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# பணயக் கைதிகளை விடுவிக்கக் கோரி இறுதி எச்சரிக்கை விடுத்தார் ட்ரம்ப்



காசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளை விடுவிக்குமாறு இறுதி எச்சரிக்கை விடுப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

நான் கூறுவதைப் போன்று நீங்கள் செய்யாவிட்டால் ஒரு ஹமாஸ் உறுப்பினரேனும் பாதுகாப்பாக இருக்க மாட்டார் என அமெரிக்க ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

அந்த பணிகளை நிறைவு செய்வதற்கு இஸ்ரேலுக்கு தேவையான சகலவற்றையும் தாம் அனுப்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பணயக் கைதிகள் விடுவிக்கப்படாவிட்டால் ஹமாஸ் தரப்பினர் நரகத்துக்குச் செல்ல வேண்டியிருக்கும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

பணயக் கைதிகள் தொடர்பில் ஹமாஸ் தரப்பினருடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதை வெள்ளை மாளிகை உறுதிப்படுத்திய சில மணி நேரங்களுக்குப் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்தகாலங்களில்ஹமாஸ்தரப்பினருடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்துவதனை அமெரிக்க தவிர்த்து வந்தது.

இந்தநிலையில், தற்போது ஹமாஸ் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் அமெரிக்கா, இஸ்ரேலுடன் கலந்துரையாடியதாக வெள்ளை மாளிகையின் பேச்சாளர் கரோலின் லீவிட் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.03.2025




இன்று நீங்கள் பொறுமையிழந்து காணப்படுவீர்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மூலம் ஆறுதல் பெறலாம். தேவையற்ற வார்த்தைகளை தவிர்க்க கவனமாக உரையாட வேண்டும்.

அதிகப் பணிகள் காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பணியில் தவறுகள் குறைய வாய்ப்புள்ளது.

குறைந்த புரிந்துணர்வு உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நீங்கள் அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று சுறுசுறுப்பாக உணர மாட்டீர்கள். யோகா பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம்.




இன்று இனிமையான தருணங்கள் காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் வர வாய்ப்புள்ளது. முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

பணியிடத்தில் சாதகமான பலன்கள் காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதன் மூலம் உங்கள் செய்திறன் நிரூபணமாகும். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

நல்ல புரிந்துணர்வின் காரணமாக உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனைத் தொடர்ந்து பராமரியுங்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். கையிலிருக்கும் உபரி பணத்தை சேமிக்கும் வாய்ப்பு காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களுக்கு எந்த ஆரோக்கியப் பிரச்சினையும் இருக்காது.




இன்று நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். இன்று கூடுதல் நன்மைகள் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். மேலதிகாரிகள் உங்கள் செயல்திறனைப் பாராட்டுவார்கள். தொடர்ந்து சிறப்பாக பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடத்திற்கு செல்வீர்கள். இருவரும் பரஸ்பரம் கருத்துக்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பண வரவு அதிகமாக இருக்கும். இதனால் உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும். இந்த வாய்ப்பை பயன்படுத்தி உங்கள் எதிர்காலத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




இன்று சவால்கள் நிறைந்து காணப்படலாம். மனக் குழப்பங்களை எதிர்கொள்ள நேரலாம்.இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இறுக்கமான பணிகளை முடிக்க திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையிடம் அமைதியாகப் பேசுவதன் மூலம் நீங்கள் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இயலும். அவரிடம் இனிமையாகப் பழக முயலுங்கள்.

பண வரவு குறைந்து காணப்படும். சூழ்நிலையை சமாளிக்க கவனமாக பணத்தை கையாள வேண்டும்.

அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் வகை உணவுகளை தவிர்ப்பதன் மூலம் இந்தச் சூழ்நிலையைக் கட்டுப்படுத்தலாம்.




இன்று சாதகமான நாளாக அமையாது. பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். நற்பலன் காண உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

குறித்த நேரத்தில் பணியை முடிப்பது கடினமாக இருக்கும். அதிகப் பணிகள் காரணமாக நீங்கள் மேற்கொள்ளும் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. நீங்கள் இருவரும் கலந்தாலோசித்து குடும்ப பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். அதிக செலவுகள் கவலையை அளிக்கும்.

பல் வலி வர வாய்ப்புள்ளதால் இன்று பற்களில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந்திருக்கும். திரைப்படம் பார்த்தல், இசை கேட்டல் போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

பணிகளைக் குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். முன்கூட்டிய திட்டமிடல் மூலம் பணிகளை சரியாக பராமரிக்கலாம். இதனால் அமைதியான மனநிலையில் இருப்பீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகள் பேசி நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் திருப்தியான உறவு உள்ளது என்பதை இது உறுதிப்படுத்தும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




இன்று நீங்கள் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் காணப்படுவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் புதிய வாய்ப்புகளும் வளர்ச்சியும் காணப்படும். இதனால் திருப்தியான மனநிலை காணப்படும். உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத் தேவைக்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். முக்கிய முடிவுகள் எதையும் இன்று எடுக்காதீர்கள். அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எனவே பணிகளை கவனமாகக் கையாளவும். இன்றைய பணிகளை மேற்கொள்ள திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்ப பிரச்சினை ஒன்றில் உங்கள் துணையை நீங்கள் சமாளிக்க இயலாத நிலை இருக்கும். நீங்கள் வேறுபாட்டை ஒதுக்கித் தள்ளி உங்கள் துணையுடன் புதிய பாதையில் பயணிக்க வேண்டும்.

இன்று அதிக செலவுகளால் வருத்தப்படுவீர்கள். இன்று உங்களால் சேமிக்க இயலாது.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்க நீங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.03.2025




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்க உகந்த நாள் அல்ல. என்றாலும். ஆன்மீக ஈடுபாடு மற்றும் இறை வழி பாடு மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை சிறப்பாக மேற் கொள்ள கவனமும் விழிப்பும் தேவை. உங்கள் பாதையில் சில தடைகள் காணப்படும். சிறந்த பலன் காண திட்டமிட வேண்டியது அவசியம்.

வேறுபட்ட மனநிலை சவாலாக காணப்படும். என்றாலும் பரஸ்பரம் வேறுபாட்டை களைந்து சுமூகமாக பிரச்சினைகளை தீர்ப்பது நல்லது.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். அதிக செலவுகளை விவேகத்துடன் கையாள வேண்டும். முடிந்த அளவு சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டும்.

உங்களிடம் பதற்றமான நிலை காணப்படும்.




இன்று உங்கள் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும். என்றாலும் தேவை யற்ற விஷயங்களுக்கு வருந்தாதீர்கள். புத்திசாலித் தனத்தை பயன்படுத்தி சாதகமான பலன்களைக் காணுங்கள்.

பணியில் தவறுகள் நேராமல் இருக்க கவனம் அவசியம். எனவே உங்கள் பணிகளை சரி பார்த்து தவறின்றி வழங்கவும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் சுமூகமான சூழ்நிலை காணப்படும். இருவரும் குடும்ப பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வீர்கள்.

பண வரவு எதிர்பார்த்த அளவுக்குக் காணப்படாது. இன்று நிதி சம்பந்தப்பட்ட எந்த முக்கிய முடிவுகளையும் எடுக்க வேண்டாம்.

சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க குளிர் பானங் களை தவிர்க்கவும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். நற்பலன்கள் நடக்கும் நாள். உங்கள் முயற்சிகளுக்கு பலன் கிடைக் கும். இன்றைய செயல்கள் எளிதாக நடக்கும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியி டங்களுக்கு செல்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக வும் உற்சாகமாகவும் இருப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டம் நிறைந்து காணப்படும். பண வரவு அதிகமாக இருக்கும். உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயர்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




இன்று அனுகூலம் சற்று குறைந்து காணப்படும். பாதகமான பலன்களால் கவலை காணப்படும். என்றாலும் மனதை மகிழ்சியாகவும் அமைதியாக வும் வைத்துக் கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் சிறிது மந்தமாக இருக்கும். சில பிரச்சினைகள் எழ வாய்ப்புள்ளதால் நீங்கள் சக பணியாளர்களுடன் கவனமாகப் பழக வேண்டும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சற்று கடின மாக இருக்கும்.

நீங்கள் உங்கள் கருத்துகளை உங்கள் துணையிடம் வெளிப்படையாக பகிர மாட்டீர்கள். இதனால் உங்கள் துணையின் நம்பிக்கை உணர்வு பாதிக்கப்படும். எனவே இந்தப் போக்கை தவிர்த்து சிறப்பாக நேரத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

# முல்லை மாவட்ட சுகாதாரத்துறைக் குறைபாடுகளை நேரில் பார்த்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்!

## சுகாதார அமைச்சரைக் கோருகின்றார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகா தாரத்துறையில் காணப்படும் குறை பாடுகளை நேரடியாக வருகைதந்து பார்வையிடுவதுடன், அந்தக் குறை பாடுகளைத் தீர்ப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுகாதார அமைச் சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் சுகாதாரத் துறை தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையொன்று நேற்று யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் இராமநாதன் அர்ச்சுனாவால் முன்மொழியப்பட்டது.

இந்த சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவிக்கும்போதே நாடாளு மன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத்




தெரிவிக்கையில் –

இந்த சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையை முன்மொழிந்தமைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இராம நாதன் அர்ச்சுனாவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுகாதார அமைச்சர் அவர்களே! சுகாதார பிரதியமைச்சர் அவர்களே! முல்லைத்தீவு மாவட்டத்தின் சுகாதாரத் தேவைகள் ஏற்கனவே உங்களிடம் சமர்ப்பித்துள்ளோம்.

நீங்கள் கவனம் எடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எம்மிடம் தாராளமாக உண்டு. வைத்தியர்கள் உட்பட சகலதுறை களிலும் ஆளணிப் பற்றிக்குறை உள் ளது. முல்லைத்தீவு மாவட்டப் பொதுவைத் தியசாலையின் கட்டடவசதி மிகவும் அவசிய தேவையாக உள்ளது.நோயா ளர்கள் தங்கிச் சிகிச்சை பெறமுடியாமல் தவிக்கின்றனர்.

நோயாளர் காவுவண்டிகளின் தேவை. முல்லைத்தீவு, அளம்பில், கொக்கிளாய் உட்பட சில இடங்களுக்கு மிகவும் அவ சியமாகத் தேவைப்படுகின்றது.

அமைச்சர்அவர்களே! முல்லைத் தீவு மிகவும் பின்தங்கியமாவட்டம். நீங்கள் பார்த்துக்கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

தயவுசெய்து நீங்கள் முல்லைத் தீவிற்கு வாருங்கள். சுகாதாரத்துறைக் குறைபாடுகளை நேரடியாக பாருங்கள். தீர்த்து வையுங்கள். – என்றார்.